


## *காலத்தின் தேவையும்*
## *அறக்கட்டளையின் சேவையும்!*

சத்தியவான் **அறக்கட்டளையின்** சார்பில் அனைத்து உறவுகளுக்கும் புதிய ஆங்கில புதுவருடத்தில் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் நிறைந்து வாழ இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

எப்படியெல்லாம் வாழ்ந்தோம், எதை எதை எல்லாம் சந்தித்தோம் என்று கடந்து சென்ற வருடத்தை எண்ணி மகிழ்ந்திருந்த அந்த காலத்தை விடுத்து, இப்படியெல்லாம் வாழ்ந்தோமா, இவற்றையெல்லாம் கற்றுக்கொண்டோமா என்று எண்ணும் வண்ணம் மானிட சமுதாயக் கட்டமைப்பையே புரட்டிப்போட்ட 2020 கடந்து 2021 இல் காலடி வைத்திருக்கிறோம். உலக வல்லரசுகள், பொருளாதாரரீதியாகவும் சரி தொழில்நுட்ப ரீதியலும் சரி நம்மை மிஞ்ச யாரும் இல்லை என்று மார் தட்டிய மேலைத்தேய நாடுகள் **Covid**-19 வைரஸின் தாக்கத்தால் நிலைகுலைந்த, தனிமனித குரூரங்களும் பல வகையில் வெளிப்பட்டு சமூக வலைத்தளங்கள் எங்கும் எள்ளி நகையாடப்பட்டது. சாதாரண **Toilet Tissue** இற்காக வர்மம் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதை இலங்கை போன்ற நாடுகளில் வாழ்பவர்களால் கூட நியாயப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ஏனெனில் இலங்கையில் **COVID** தாக்கத்தால் நாளாந்தம் இறப்பபோரின் எண்ணிக்கை 2 அல்லது 3 மட்டுமே; ஆனால் உலக நாடுகளில் தாங்கள்தான் முதலிடம் என்று பெருமை பேசிக்கொண்டிருக்கும் அமெரிக்காவிலோ **COVID** தாக்கத்தால் நாளாந்தம் இறப்போரின் எண்ணிக்கை 3000 - 4000 வரை. அப்படியாயின் எந்த நாட்டு மக்களின் வாழ்க்கை முறை சிறந்தது என்பதை நீங்களே முடிவுசெய்துகொள்ளுங்கள்

இலங்கையில் எமது உறவுகள் இந்த வைரசின் தாக்கத்தால் பல்வேறு வகையில் தமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளும் நிலையில் அவர்களது அன்றாட வாழ்வாதாரம் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளது, என்பதை நன்குணர்ந்த காரணத்தால் சத்தியவான் அறக்கட்டளை இதுவரை செய்துவந்த செயற்திட்டங்களைவிட இனிவரும் காலங்களில் செயற்திறனை பலமடங்கு அதிகரிக்க வேண்டும் என்று அனைத்து நிர்வாக குழு உறுப்பினர்களாலும் ஒருமனதான முடிவு எடுக்கப்பட்டது.

முதல் கட்டமாக இந்த ஆண்டு முதல் இனிவரும் காலங்களில் தனிநபர் தொழில் முயற்சிக்கான திட்டத்தின் கீழ் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை இரண்டிலிருந்து நான்காக அதிகரிப்பதன் மூலம் என்றும் இல்லாதவாறாக எமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலையை போக்க நாம் நேரடியாக கை கொடுத்து உதவ முன்வந்துள்ளோம். இறுதியாக கடந்த காலங்களில் மேற்கொண்ட சில வேலைத்திட்டங்களை எவ்வாறு மேலும் மேம்படுத்த முடியும் என்று ஆய்ந்து அதற்கான உதவிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளையும் சத்தியவான் அறக்கட்டளை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு காலத்தின் மாற்றத்துடன் மக்களின் தேவைகளிற்கேற்ப தனது சேவைகளை விஸ்தரித்துக்கொண்டு எமது மக்களுடன் பயனிப்பதையே கொள்கையாக கொண்டுள்ளது, என்பதைக் கூறுவதில் மிகவும் பெருமிதம் கொள்கிறோம்.

# அறக்கட்டளையால் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள்

தனிநபர் சுயதொழில் உதவிவழங்கல் திட்டத்தின் கீழ் தொடர்ந்து ஏழாம் நபராக திரு திருமாறன் தெய்வேந்திரராசா (இன்பர்சிட்டி) அவர்களுக்குத் தையலகம் அமைப்பதற்கும், எட்டாம் நபராக திருமதி ரஞ்சினி பிரதீபன் (வள்ளிபுனம்) அவர்களுக்கு உணவகம் அமைப்பதற்குமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.





வேலைவாய்ப்பு அருகி வரும் இக்கட்டான காலத்தில், தனக்கும் தனது மனைவிக்கும் தெரிந்திருந்திருந்த தையல் தொழிலை மூலதனமாக் கொண்டு தாம் சுயமாக வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்தக்கூடியவாறு தையல் இயந்திரம் வாங்குவதற்கு உதவி செய்து எம் வீட்டிலேயே தையலகம் அமைக்க உதவியது என்பது மிகப்பெரிய உதவியாகும்; என்று திருமாறன் தனது நன்றிகளை மனப்பூர்வமாக சத்தியவான் அறக்கட்டளைக்கு தெரிவித்திருந்தார்.







பயனாளிகள் வரிசையில் பயன்பெற்ற திருமதி ரஞ்சினி கூறுகையில்; ஒரு உணவகத்தை அமைத்து அதனை செவ்வனே நடாத்துவதன்மூலம் அத்தியாவசிய தேவைகளுடன் மேலதிகமாக நாளாந்த மற்றைய **தேவைகளையும்** பூர்த்தி செய்யக் கூடியவாறு எமது குடும்பநிலையை மாற்றியமைக்க இந்த உணவுச்சாலையே காரணம். இதை அமைக்க உதவிய சத்தியவான் அறக்கட்டளைக்கு தனது மனம் நிறைந்த நன்றிகளை **Audio** மூலமாகவும் தெரிவித்திருந்தார்.










தனிநபர் சுயதொழில் உதவிவழங்கல் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டிலிருந்து நால்வருக்கு வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வரிசையில் ,
1) மோகனதாஸ் ஜெகதீசன் (புதுக்குடியிருப்பு)
2) சிவதாஸ் கல்ப்பனா (இன்பர்சிட்டி)
3) கிருஸ்ணபிள்ளை சிறீஸ்கந்தராஜா (இன்பர்சிட்டி)
4) விசியகுமார் பிரபாளினி (திருகோணமலை)

ஆகிய நால்வருக்கு உதவி வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**மற்றும் இந்த ஆண்டில் நிர்வாகக் குழுக்கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்துவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவை அந்தக் காலங்களில் நிலவும் நிலைமைக்கேற்பவும் பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு ஏற்பவும் நடாத்தப்படும் .அதற்காக தெரிவு செய்த நாட்கள் வருமாறு;**

- **24/01/2021**
- **28/03/2021**
- **23/05/2021**
- **25/07/2021**
- **26/09/2021**
- **28/11/2021**